AADHAAR

கையேடு 1

UIDAI மற்றும் ஆதார் குறித்த அடிப்படை அறிவு

UIDAI

(இந்திய தனித்துவ அடையாள ஆணைய அமைப்பு)

முன்னுரை

இந்த பயிற்சி கையேடு இந்திய தனித்துவ அடையாள ஆணைய அமைப்பு(UIDAI)மற்றும் ஆதாரை அறிமுகப் படுத்துகிறது.

இந்த பயிற்சி கையேடு வாசகர்கள் எல்லோருக்கும் UIDAI மற்றும் ஆதார் குறித்த உறுதியான தகவல்களை எடுத்துரைக்கும். இந்த கையேடு அடையாளம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் - ஆதார் என்ற பெயரில் அரசு மூலமாக முக்கிய கருத்துக்களை உள்ளடக்கி துவங்குகிறது UIDAI. இன் இலக்குகள் மற்றும் நோக்கங்களை சுற்றியே இந்த புத்தகத்தின் பெரும்பகுதி அமைந்திருக்கும் . இந்த கையேட்டின் அடுத்த பகுதி UIDAI இன் சூழல் அமைப்பை குறித்து விவரிக்கும் . இந்த புத்தகத்தின் இறுதி பாகம் எல்லோருக்கும் ஆதாரின் நன்மைகளை எடுத்துரைக்கும். இந்த புத்தகம் ஒரு மனிதனுக்கு தன் அடையாளம் -தொடர்பான பிரச்சனைகளை எடுத்துரைக்கும். உண்மையான வாழ்க்கை சூழலில் நடக்கும் சில காட்சிகளை இப்புத்தகத்தில் காணலாம்.

முக்கிய பார்வையாளர்கள்

- என்ரோல்மென்ட் (சேர்க்கை) ஆபரேட்டர்கள்
- என்ரோல்மென்ட் (சேர்க்கை)ஏஜென்சி சூபர்வைசர்கள்
- பதிவாளரின் மேற்பார்வையாளர்கள்
- அறிமுகப் படுத்துவோர்
- தொழில்நுட்ப ஆதரவு ஊழியர்கள்.
- UIDAI மற்றும் ஆதார் குறித்து தெரிந்து கொள்ள விரும்பும் எவராகினும்.

சார்ந்துள்ள அல்லது தொடர்பான பகுதிகள் :

இந்த கையேட்டை படிக்க UIDAI அல்லது ஆதார் தொடர்பான எந்த விதமான முன் அறிவும் தேவையில்லை . இதில் பங்கு பெறும் எல்லோருக்கும் பொதுவானது . முதன் முதலில் இந்த பயிற்சி பகுதியின் முதல் கையேடு துவக்கப் பட்டுள்ளது . பின்வரும் பகுதிகள் பங்கு பெறுபவர் இதை படித்து முடித்துவிட்டார்கள் என்று கருதப்படும்.

பொருளடக்கம்

நோக்கங்கள் 1

நீங்கள் தனித்துவமானவர். 1

வினாடி வினா 3

உங்களிடம் தனித்துவ அடையாளம் உள்ளதென்று நிரூபித்தல் மூலம் ஏற்படும் நன்மைகள் 3

உங்கள் அடையாளத்தை நிரூபிக்கவும்.! 4

அடையாளம் சரிபார்த்தல் 5

அரசாங்கத்திடமிருந்து ஒரு தீர்வு - ஆதார் 8

இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) 9

UIDAI- ன் லட்சியம் மற்றும் இயக்கம். 10

UIDAI சூழல் அமைப்பு 13

வினாடி வினா 15

ஆதார்" "மூலமாக எல்லோருக்கும் ஏற்படும் (நன்மைகள்): 15

பரப்புதல்: “தகவல் மற்றும் விழிப்புணர்ச்சி “ என்ற வார்த்தையை பரப்புதல் 16

சுருக்கம் / குறுகிய படிவம் 20

நோக்கங்கள்

இந்த பகுதியில், நீங்கள் கற்றுக் கொள்ளப்போவது

- UID என்றால் என்ன? (தனித்துவ அடையாள) எண் /ஆதார்.
- இந்திய தனித்துவ அடையாள ஆணைய அமைப்பின் இலக்குகள். (UIDAI)

நீங்கள் தனித்துவமானவர்.

நீங்கள் பிறந்த போது இந்தியாவில் அப்பொழுது பிறந்த ஆயிரக்கணக்கான குழந்தைகளைப் போலவே இருந்திருப்பீர்கள். சில மாதங்களுக்குப் பிறகு உங்கள் பெற்றோர்கள் உங்களுக்கு ஒரு பெயர் சூட்டியிருப்பார்கள். அந்தப் பெயர் உங்களை அந்த ஆயிரம் குழந்தைகளிடமிருந்து வேறுபடுத்தும்.

ஆனால் அது போதாது. உங்களை மற்றவர்களிடமிருந்து தனித்துவமாக' அடையாள படுத்த வேறு என்னென்ன வேண்டும்?

பெயர்

- பிறந்த இடம்
- பிறந்த தேதி
- இனம்
- தந்தை /கணவர் /தாய் /மனைவி / கார்டியன் பெயர்
- படித்த பள்ளி/கல்லூரி
- விலாசம்.

மேற்கூறிய எல்லா விவரங்களும் கீழே குறிப்பிட்டது போன்ற வெவ்வேறு ஆவணங்களை ஒப்பிட்டுசரிபார்த்து கொள்ளலாம்.

- பிறப்பு சான்றிதழ்
- பள்ளி முடிவுச் சான்றிதழ்
- ரேஷன் கார்டு
- ஓட்டுனர் லைசன்ஸ், போன்றவை.

ஆனால் கீழே குறிப்பிட்டதில் ஏதும் பிழையற்றதாக அமைய வேண்டும். பல இடங்களில் அது பிரச்சினையாக உள்ளது. அதாவது

- உங்களது அடையாளத்தை தெரியப் படுத்துதல்
- உங்களது அடையாளத்தை மற்றொருவர் அல்லது ஏஜென்சி சரிபார்த்தல் .

தற்காலத்தில், தொழில் நுட்பம் நம்முடைய உடல் அம்சங்களில் சிலவற்றை பதிவு செய்து நம்மை மற்றவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட உதவி செய்கிறது. அவையாவன;



படம் 1: விரல் ரேகைகள்

விரல் ரேகைகள்– : நம்முடைய விரல்களின் நுனியில் இருக்கும் கோடுகள் தனித்துவமானவை. இவற்றை புகைப்பட மெடுத்து எதிர்கால குறிப்பிற்கு சேமித்து வைக்க முடியும். நமது சட்ட அமைப்பு (நீதிமன்றம்)மற்றும் நிதித் துறை நிறுவனங்கள் (வங்கிகள்) உட்பட பல்வேறு ஏஜென்சிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட அடையாள படிவம் இது எனலாம்.)



படம் 2: கருவிழி

நமது முகத்தின் புகைப்படம்– மிகவும் பொதுவாக நம்மை அடையாளம் கண்டுகொள்ள பயன்படுத்தப்படும் ஒரு விஷயம் நமது முகத்தைப் புகைப்படம் எடுப்பது. ஒரு புகைப்படம் அல்லது வீடியோ படத்தில் இருந்து நம்மை அங்கீகரிக்க முக அங்கீகாரம் ஒரு வழியாகும். இதில் சில அம்சங்கள் நம்மை அடையாளம் காட்டும். விரல் ரேகையைப் போலவே ஒரு மனிதனின் முக அம்சங்களும் பிரித்தெடுக்கப்பட்டு தகவல்களுக்காக சேமித்து வைக்கலாம்.

கருவிழி – ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவ அமைப்பு கருவிழிப் பகுதிக்கு உண்டு. புகைப்படத்தைப் போலவே, தற்காலத்தில் ஒரு நபரின் கருவிழி விவரங்களை படம் பிடித்து சேமித்து வைக்க முடியும்.

ஒரு நபரை துல்லியமாக அடையாளம் காட்ட மேற்கூறிய எல்லா வழிகள் அல்லது சில ஆவணங்கள் மூலம் பிறப்பு சான்றிதழ், ரேஷன் கார்டு அடையாளம் காணலாம்.

குறிப்பு : மக்கள் தொகை & உயிரியல் தகவல்கள் .

ஒரு நபரின் பெயர், விலாசம் , பிறந்த தேதி போன்ற விவரங்களை அதிகாரபூர்வமான தரவுகளின் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இவற்றை 'மக்கள் தொகை தகவல் ' என்று குறிப்பிடுவார்கள். தேசீய இனம், வயது, கல்வி, மதம், வேலை, வாய்ப்பு நிலை போன்றவை தொடர்பான மக்கள் தொகை தகவல்களை பாஸ்போர்ட் , ரேஷன் கார்டு , பள்ளி சேர்க்கை , போன்றவற்றிற்கான விண்ணப்ப படிவங்களைப் பூர்த்தி செய்யும்போது சேகரிப்பார்கள். பயோ மெட்ரிக்(உயிரி அளவுகள்) என்றால், நமது உடல் மற்றும் அதன் பாகங்கள் தொடர்பான தகவல்கள் ஆகும். கருவிழி, விரல் ரேகை, முகம். போன்ற உடல் பண்புகள் தொடர்பான தகவல்கள் 'பயோ மெட்ரிக்' தவல்கள் எனப்படும்.

வினாடி வினா

1. "தனித்துவம்" என்பதன் அர்த்தம் என்ன?
2. உங்கள் உடலில் எந்த பாகத்தில் கருவிழி தெரியும் ?
3. மக்கள் தொகை " என்றால் என்ன?
4. "பயோ மெட்ரிக்" என்றால் என்ன அர்த்தம் "?

உங்களிடம் தனித்துவ அடையாளம் உள்ளதென்று நிரூபித்தல் மூலம் ஏற்படும் நன்மைகள்

நாம் எல்லோரும் ஒரே மாதிரி இருந்தாலும், நமக்கு ஒரே பெயர் இருந்தாலும் என்ன ஆகும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்

குழப்பம்! ஆகையால் உங்களிடம் தனித்துவ அடையாளம் உள்ளதென்று நிரூபித்தால் என்ன நன்மைகள் ஏற்படும்?

- நீங்கள் வங்கிக் கணக்கு வைக்கலாம். வேறு யாரும் அதை உபயோகிக்க முடியாது. இதன் கருத்து உங்களைத் தவிர, உங்கள் பணத்தை வேறு யாரும் எடுக்க முடியாது.
- உங்களுக்கு தொலைபேசி தொடர்பு மொபைல் அல்லது லேன்ட் லைன் கிடைக்கும்.
- உங்களுக்கு சொந்தமான வீடு, ஒரு கடை இருக்கலாம். அல்லது ஒரு வர்த்தகம் செய்யலாம்
  உங்களிடமிருந்து அதை யாராலும் பறிக்க முடியாது .
- நீங்கள் ஒதுக்கப் பட்டவராகவும், வறுமைக் கோட்டில் இருந்தாலும் அரசாங்கத்தின் மானிய உணவு விநியோகம், மற்றும் உங்களுக்குத் தகுதி உள்ள இதர லாபங்களைப் பெறமுடியும்.

உங்கள் தனித்துவ அடையாளத்தை நிரூபித்தால், கிடைக்கும் இதர நன்மைகள் என்னென்ன ?

உங்கள் அடையாளத்தை நிரூபிக்கவும்.!



வழக்கு 1: தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் வேறு மாநிலத்திலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் மெகானிக் சுனில் குமார் கணக்கு துவக்க விரும்பினார் ஆனால், வங்கி அவரிடம், அவரது அடையாள ஆதாரம், முகவரி ஆதாரம் போன்றவற்றை கணக்கு துவக்கும் படிவத்துடன் சமர்ப்பிக்கும்படி கேட்டது. சுனில் குமாரிடம் அடையாள ஆதாரம் இல்லாததால் வங்கி கணக்குத் துவங்க மறுத்து விட்டது. இப்பொழுது சுனில்குமார் தனது பணத்தை பர்சிலோ அல்லது வீட்டிலோ வைக்க வேண்டும்.தொலைந்து விடுமோ அல்லது யாராவது திருடி விடுவார்களோ என்று பயப்படவேண்டும். வங்கிக் கணக்கு இல்லாததால் பல்வேறு அரசுத் திட்டங்களில் இருந்து அவர் தகுதி பெற்ற கடன் பெற முடியவில்லை. இதனால் தெருவோர கடையாக தனது ரிப்பேர் ஷாப்பை வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

வழக்கு 2: மாநில அரசு சேரி புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் மறுபடியும் கட்டப்பட்ட குடிசைப் பகுதியில் வாழ்கிறார்கள். இருவரும் தமக்கென்ற இருப்பிடத்திற்கு உரியவர்கள்தான். ஏ.ஆர் விஜய்யிடம் அவர் தகுதியை நிரூபிக்க தேவையான ஆதாரங்களை வைத்திருந்தார். துரதிருஷ்ட வசமாக ஆர். விஜய்யிடம் அவர் அடையாளத்தை நிரூபிக்க தேவையான ஆதாரங்கள் இல்லை. இப்பொழுது ஆர்.விஜய் வீடில்லாமல் நடைபாதையில் குடும்பத்துடன் வாழ வேண்டிய நிலையில் உள்ளார். அவரது குடிசை இருப்பிடம் வீட்டு வாரிய திட்டத்தின் கீழ் வசிப்பதற்குத் தகுதியானவர் அல்லது பணம் செலுத்தும் நபருக்கு வழங்கப்பட இருக்கிறது

வழக்கு 3: நீட்டா வயது 66 என்ற பெண்மணி வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்.பல்வேறு அரசுத் திட்டங்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கென்று (BPL) துவங்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலமாக அவர்கள் ரேஷன் மற்றும் முதியோர் பென்ஷன். போன்றவற்றை பின் தங்கிய மக்களுக்கு (BPL) தருகின்றன. ஆனால் நீட்டா இப்படிப்பட்ட லாபங்கள் எதுவும் அரசுத்

திட்டத்தின் கீழ் பெற முடியவில்லை. ஏனெனில் அவரிடம் அடையாள ஆவணங்கள் ஏதும் இல்லை.

மேலே கூறப்பட்ட மூன்று வழக்குகளிலும், எல்லா வழக்குகளிலும் பொதுவான பிரச்சினையாகிய சரியான அடையாள ஆதாரம் மற்றும் முறையற்ற அங்கீகாரம் போன்ற காரணங்கள் தெரிய வருகின்றன. இதனால் ஒரு நபரின் தனித்துவம் நிரூபிக்க முடியவில்லை. இதனால் நாம் முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் வங்கிகணக்கு, வீடு அல்லது உணவு வளங்கள் எல்லாம் கிடைக்க ஒரு நபரின் அடையாளத்தை மட்டும் நிரூபித்தால் போதாது. ஆனால், அரசாங்கம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு உதவ அடையாள ஆதாரம் இருப்பது முக்கியமாகும்.

அடையாளம் சரிபார்த்தல்

அடையாளம் சரிபார்த்தல்.

ஒரு நபர் தன்னுடைய ஆவணத்தின் மூலம் தன்னை தனித்துவமாக காட்டிக்கொள்கிறார்.ஆனால் அதை ஒரு நிறுவனம் அந்த நபர் சமர்ப்பித்த அடையாளத்தை அந்த நபருடையதா என்று எவ்வாறு பரிசோதிக்கும்?

அடையாளத்தை சரிபார்க்க ஆவணங்களை பரிசோதித்தல் மிகப் பெரிய அளவில் மற்றும் கிரமப்படி என்பது நடைமுறையில் வழக்கமானது அல்ல. எடுத்துக் காட்டாக, வங்கி வாடிக்கையாளர்கள் அல்லது ஒரு பெரிய நிறுவனத்தின் ஊழியர்கள் ஆகும்.
ஒரு நபரின் அடையாளத்தை உறுதிசெய்ய அவருக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையில் அவருடைய முகம் பதிக்கப்பட்டு இருக்க வேண்டும்.
வங்கிகள் மற்றும் இன்ஷ்யூரன்ஸ் (காப்பீடு) நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்கள் ஒரு நபரின் கையொப்பம் அல்லது விரல் பதிவை அடையாளத்தை சோதிக்க உபயோகிக்கும். இதற்கு எல்லா நபர்களின் மாதிரி கையொப்பங்கள் மற்றும் விரல் பதிவுகள் வங்கி கணக்கு துவக்கும்போது அல்லது ஒரு இன்ஷ்யூரன்ஸ் பாலிசிக்காக விண்ணப்பிக்கும்போது சேகரிக்கவேண்டியது அவசியமாகும்.
தற்போதைய சூழ்நிலையில் ரேஷன் / PDS புகைப்பட அட்டை , வாக்காளர் அடையாள அட்டை /கிசான் போட்டோ பாஸ்புத்தகம் போன்ற ஆவணங்களை ஒரு நபரின் அடையாளத்தை பரிசோதிக்க உபயோகிக்கலாம். தினசரி செயல்பாட்டிற்காக ஒரு நபர் கட்டாயமாக ஒரு போட்டோ அடையாளம் அல்லது அடையாளம் காட்டும் கையொப்பம் அல்லது விரல் பதிவு வைத்திருக்க வேண்டும்.
இத்தகைய ஆவணங்கள் இல்லாத மக்களுக்கு பிரச்சினைகள் தீராது. அப்படிஎன்றால் தீர்வு என்ன ?

குறிப்பு : குடியுரிமை
இந்தியாவில் தற்போது வசித்து வரும் நபர் இந்திய குடியுரிமை உள்ளவர்

உயிரியல் உறுதிப்பாடு.

. ஒரு நபருக்கு கிரெடிட் அட்டை அல்லது கடன் வழங்குதல் போன்ற சேவைக்கு அந்த நபர் அவசியமாக அடையாளத்தை நிரூபிக்க வேண்டும்.அந்த நபரின் அடையாளத்தை நிரூபிக்க போட்டோ மற்றும் இதர ஆவணங்களை சமர்ப்பித்தல் போன்றவை செயல்முறையில் அடங்கும்.அரசு ஆவணங்களில்.

இரட்டிப்பு பெயர்கள் மற்றும் உயிரோடு இல்லாத நபர்களின் ஆவணங்களும் கலந்து இருக்கும் (இந்த பெயர்களை "பேய்கள்" என்பார்கள்).

வழக்கு 1: மானவ் என்பவர் ரோஹித் என்பவரின் ரேஷன் அட்டை மற்றும் செக் புத்தகத்தை திருடி விட்டார் (இது அடையாளத் திருடு எனப்படும்.) மற்றும் ரோஹித் என்று பாசாங்கு செய்கிறார். (இதை ஆள்மாறாட்டம் என்று கூறுவர்). மானவ், தான் திருடிய ரேஷன் அட்டையை முகவரி ஆவணமாக உபயோகித்து மாத தவணைத்திட்டத்தில் டெலிவிஷன் வாங்குகிறார். செக் (காசோலை) திரும்பி வந்ததும், டெலிவிஷன் (தொலைகாட்சி) வழங்கியவர் தவணை பணத்தை வாங்க அவரின் விலாசத்திற்கு செல்கிறார். ரோஹித், கடைக்காரரை தான் அந்த பர்ச்சேஸ் செய்யவில்லை என்று நிரூபிக்க சிரமப் படுகிறார்.

வழக்கு 2: ஒரே இடத்தில் வசிக்கும் இரட்டையர்களை எப்படி தனித்துவப்படுத்தி அடையாளம் காட்டுவீர்கள் ?

ஒரு நபரை தனித்துவப்படுத்துவது என்பது அத்தனை சுலபமானது அல்ல. எந்த ஒரு அளவுருவை வைத்தும் அந்த நபருடைய அடையாளத்தை கணிக்க முடியாது.ஆகையால்,பல்வேறு முறையான சரிபார்த்தலின் படி நீங்கள் அந்த சேவைக்கு தகுதியானவரா என்று அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் சரி பார்க்கும். உங்களை பல்வேறு முறையாக சரிபார்த்தலின் மூலம் அதிக பணம், முயற்சி மற்றும் நேரம் செலவழிக்க படுகிறது.

ஒரு நபரின் அடையாளத்தை துல்லியமாக சரிபார்க்க மற்றும் பிரச்சினையைத் தீர்க்க உயிரியல் அளவீடு மிகச் சிறப்பான வழிமுறை ஆகும்.

காட்சி 3: அடையாள ஆவணங்களை சமர்ப்பித்து வங்கிக் கணக்கு துவங்குதல்

அரசாங்கத்திடமிருந்து ஒரு தீர்வு - ஆதார்

இந்திய வாழ் குடிமக்களுக்காக தனித்துவ அடையாள படிவம் ஒன்று இருக்க வேண்டும் என இந்திய அரசாங்கம் ஆலோசனை செய்துள்ளது. ஒரு தனிநபரின் மக்கட்தொகையியல் மற்றும் உயிரியல் அளவீடு தகவல்களுடன் தொடர்பு கொள்ளும் வகையில் ஒரு தனித்துவ எண்ணின் அடிப்படையில் அடையாளம் காட்டுதல் இதன் நோக்கமாகும். இந்த தனித்துவ எண்ணின் அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- அது இந்தியக் குடிமகனாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் தோராயமாக உருவாக்கப்பட்ட 12 இலக்க எண்ணாக இருக்கும். உதாரணம்:2653 8564 4663. இந்த எண் தனித்துவ அடையாள எண் (UID) அல்லது ஆதார் எண் என்று அழைக்கப்படும்.
- இந்த எண் தனித்துவமானது. அதாவது இரண்டு இந்திய குடிமக்கள் ஒரே எண்ணை வைத்திருக்க முடியாது.
- எந்த குடிமகனும் இரண்டு எண்களை வைத்திருக்க முடியாது. ஏனெனில் ஆதார் என்பது பெயர், விலாசம், வயது போன்ற நிலையான தகவல்கள் அடிப்படையில் அமைந்தது அல்ல. ஆனால் ஒவ்வொரு மனிதனிடமும் தனித்துவமாகிய இருக்கும் உயிரியல் தகவல்கள் அடிப்படையிலும் இருக்கும்.
- அதன் மதிப்பு மற்றும் அமைப்புக்குள் எந்த விதமான கூடுதல் விவரமும் ஆதார் எண்ணுடன் இருக்காது. மோசடிகளைத் தவிர்க்க இவ்வாறு அமைக்கப் பட்டுள்ளது .ஒரு பகடையை எறிவது போல பரிசுக் கூப்பனில் லாட்டரி விழுவது போல தோராயமாக ஒரு எண் ஆதார் எண்ணாக இருக்கும்.
- அடையாளத்தை நிரூபிக்க ஆதார் உபயோகப்படும். குடியுரிமையை அல்ல.
- இந்தியாவில் உள்ள மக்களுக்கு ஆதார் எண் இருக்கவேண்டிய கட்டாயமில்லை. இது சுய விருப்பம். ஆயினும் எதிர்காலத்தில் சில சேவை வழங்குவோர் (அரசு அல்லது தனியார் ஏஜென்சிகள்) அவற்றின் சேவைகளைப் பெறுவதற்கு ஆதார் எண் இருக்க வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தலாம்.

உதாரணமாக, எதிர்காலத்தில், பொது விநியோக அமைப்பு துறை, தனி நபர் ஆதார் எண்ணின் அடிப்படையில் ரேஷன் வழங்கலாம். ரேஷன் கார்டில் இந்த நம்பர் குறிப்பிடவேண்டும்.

குறிப்பு: ஆதார் என்றால் என்ன ?

ஆதார் எனும் வார்த்தை, பல மொழிகளில் "அஸ்திவாரம்" என்று மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.'ஆதார் எனும் வார்த்தை தனித்துவ அடையாள எண் அதாவது 12-இலக்க எண். இந்திய குடிமக்களுக்கு அவர்களின் மக்கள் தொகையியல் மற்றும் உயிரியல் தகவல் சரிபார்த்தலுக்குப் பிறகு வழங்கப்பட்ட எண்ணாகும்.

குறிப்பு: பொது விநியோகஅமைப்பு (PDS)

நாம் அறிந்த வழியாகிய ரேஷன் கடை அல்லது நியாய விலைக் கடைகள் போன்ற நெட்வர்க் வழியாக தொடர்ந்து விநியோகம் செய்யும் வகையில் முக்கியமான பொருட்களை மிக அதிக அளவில் விநியோகம் செய்யும் அமைப்பு PDS ஆகும். முக்கியப் பொருட்கள், கோதுமை, அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்றவை ஆகும்.

இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI)

28 ஜனவரி 2009 ஆம் ஆண்டு திட்டக் கமிஷன் மூலம் UIDAI ஒரு கூடுதலான அலுவலகம் என்றும் இதில் 115 அதிகாரிகள் உள்ளடங்கிய துவக்கக் குழுவாக செயல்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

UIDAI என்பது ஆதார் எண்கள், இருப்பிட தகவல்களை மேம்படுத்துதல், நிவாசிப்பவரின் அடையாளத்தை தேவைப்பட்டபடி அங்கீகரித்தல் போன்றவற்றை வழங்கும் மத்திய அடையாள தரவு களஞ்சியத்தை (CIDR) நிர்வகிக்கும் ஒழுங்குமுறை ஆணையமாகும்.

UIDAI சரியான சட்டங்கள் தொழில்நுட்பங்கள் மற்றும் கட்டமைப்பு ஆதார் - இல் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் பதிவு செய்யப்பட்டதா என்றும் சரியாக செயல்படுகிறதா என்றும் உறுதிப்படுத்தும்.



UIDAI- ன் லட்சியம் மற்றும் இயக்கம்.

UIDAI's ன் லட்சியம் மற்றும் இயக்கம்என்னவென்றால்

- UIDAI இந்தியக் குடிமக்களுக்கு ஆதாரை வழங்கும்
  - அதை விரைவாக, குறைவான செலவில் எளிதாக சரிபார்க்க முடியும்.
  - இரட்டை மற்றும் போலி அடையாளங்களை நீக்கும்.
- இந்தியக் குடிமக்கள் எல்லோரையும் பதிவு செய்வது என்பது UIDAI ன் நோக்கமாகும். ஆனால் முக்கியமாக வறுமையில் உள்ளவரை. பதிவு செய்ய வேண்டும் பொதுவாக, வறுமையில் உள்ள பகுதியினர் தங்களிடம் அடையாளத்தை நிரூபிக்கும் எந்த ஒரு ஆவணமும் வைத்திருப்பதில்லை. 'ஆதார்' ஒவ்வொரு தனி நபருக்கும் அவர்களை எந்த ஒரு கஷ்டத்துக்கும் அல்லது தொல்லைப் படுத்தாமலும் வழங்கப்படும்.
- நீண்ட காலமாக இந்திய அரசாங்கம் தனது குடிமக்களின் மக்கள் தொகை விவரங்களை சேகரித்து வருகிறது.



காட்சி 4: இந்திய குடிமக்கள் எல்லோரும் சேர்ந்தது.

ஆயினும், இப்போதுள்ள பொது விநியோக அமைப்பு, வருமான வரி , ஓய்வூதியத் திட்டம் போன்ற அடையாள தரவு அமைப்புகள் "இரட்டை அல்லது பேய்கள்" (இறந்தவர்களின் விவரம்) போன்ற பிரச்சினைகளை அடிக்கடி சந்திக்கிறது.

உதாரணமாக, K S K துர்கா எனும் 45 வயது பெண்மணி சில வருடங்களுக்கு முன்னர் இறந்து விட்டார். இன்னொரு 43 வயதுள்ள K. துர்கா எனும் பெண்மணி, தான் K.S.K துர்கா என்று அடையாளம் காட்டி இறந்த K.S.K துர்காவிற்கு தகுதியுள்ள எல்லா லாபங்களையும் பெற்று விட்டார் . இத்தகைய மோசடிகளை ஆதார் தடுக்கலாம்.

இத்தகைய மோசடிகளைத் தவிர்க்க , UIDAI குடிமக்களின் மக்கள் தொகையியல் மற்றும் உயிரியல் தவல்களை சரிபார்த்து அதன் பின்னரே UIDAI டேட்டா வில் பதிவு செய்யத் திட்டமிட்டுள்ளது. இது நிகழ்வு துவங்கும் முன்னரே சேகரிக்கப் பட்ட தரவு சரியானது என்று உறுதிப்படுத்தும். இப்பொழுது, லாபங்களை வழங்க ஒரு நபரின் அடையாளத்தை பரிசோதிக்க உயிரியல் அத்தாட்சி உபயோகப்படுத்தப் பட்டால், பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

குறிப்பு : தரவு தளம்

டேட்டா பேஸ் என்பது இது தொடர்பாக சேகரிக்கப் பட்ட தகவல் தளம் ஆகும். உதாரணமாக "அகராதி" என்பது டேட்டா பேஸ். - A ஆகுமடெலிபோன் டைரக்டரி என்பதுவும் தரவு தளத்தின் ஒரு எடுத்துக் காட்டாகும். ஒரு கணினியின் உள்ளேயே தகவல் தளத்தை அமைக்க முடியும். இதனால் தகவல் தளத்தை எளிதிலும், விரைவாகவும் தொடர்பு கொள்ள முடியும்.



பெயர்	விலாசம்	வயது
A.ராய்	34 எம். ஜி ரோடு மும்பை-54	56
A.ராய்	S.C.மார்க், பெங்களூரு -20	43
கே முருளி	11 பி படில் காலனி, கொல்கத்தா -71	24
ஜி.சமீர்	மிரா பஜார் , தில்லி -1	33
ஆர். பிரசாத்	43, நேதாஜி நகர், சென்னை. – 23	26
எம் டேவிட்	11, பேலஸ் ரோடு, மும்பை -1	76
எம் டேவிட்	பேலஸ் ரோடு, மும்பை -1	71

ஆதார்.	பெயர்	விலாசம்	வயது	…..
2341 4564 3244	A ராய்	34 எம். ஜி ரோடு மும்பை-54	56	…..
1224 6574 2517	P சென்	43, ஜி. டி.ரோடு, கோவா - 32	34	…..
5423 4526 1232	கே முருளி	11பி.படில்காலனி, கொல்கத்தா -71	24	…..
5432 4524 6787	ஜி.சமீர்	மிரா பஜார் , தில்லி -1	33	…..
3456 1324 6754	எம்.டேவிட்	11,பேலஸ் ரோடு, மும்பை – 1	76	…..

காட்சி 5: சரியான தகவல் பயோ மெட்ரிக் அடிப்படையில் சேகரிக்கப் பட்டு இறுதியான தரவு தளத்தில் கூடுதலாக ஆதார் பத்தி இணைக்கப்படும்.

இரட்டிப்பு நிலை இல்லாமை (டீ -டியூப்ளிகேஷன்): அமித் B என்பவர், ஆதார்-கார்டுக்கு விண்ணப்பித்து மும்பையில் பெற்றுக் கொண்டார். சில வருடங்கள் கழித்து மும்பையிலிருந்து கொல்கத்தாவிற்கு மாறுதல் ஆகி மறுபடியும் ஆதார் கார்டுக்கு இந்த சமயம் அமித் பனாட் என்ற பெயரை உபயோகித்து விண்ணப்பித்தார். மக்கள்தொகையியல் மற்றும் பயோ மெட்ரிக் தரவைப் பெறும்போது ,CIDR-இரட்டிப்பு நிலை சரிபார்க்கப்படும். அமித் B யின் தகவல்கள் CIDR -ல் இருந்ததால், புது ஆதார் தரப் படவில்லை மற்றும் விண்ணப்பம் மறுக்கப் பட்டது. . அமித் தனது பிறப்பு தேதியை மாற்றி சான்றிதழ்கள் பெற்று விண்ணப்பித்தால் இது போன்ற பெயர் பல இருக்கும் என்று நினைத்து ஆதார் வழங்க இயலும் ஆனால், அவரது உயிரியல் தகவல்களைஅதாவது, விரல் ரேகை, கருவிழிப் படலம் போன்றவற்றை மாற்ற இயலாது. எனவே ஒரு நபர், பெயரை தவறாக பதிவு செய்திருந்தால் அதை சட்ட ரீதியாக மாற்றம் செய்தால் மட்டுமே மாற்ற முடியும்

- UIDAI அதிகார பூர்வமான வலுவான படிவத்தை (இன்டர்நெட், மொபைல் போன், டெலிபோன், மூலம்) வழங்கும். ஏஜென்சிகள் விவரங்கள் சேமித்து வைக்கப்பட்ட மத்திய தரவு தளத்திற்கு (CIDR) சென்று ஒரு நபரின் மக்கட்தொகையியல் மற்றும் பயோ மெட்ரிக் தகவல்களை ஒப்பிட்டு பார்த்துக் கொள்ளலாம். வங்கிகள் போன்ற அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் மத்திய தரவு தளம் சேமித்து வைக்கப்பட்ட கணினியை இணைக்கச் செய்யலாம்.



படம் 6 : சரிபார்த்தல் முறை

எடுத்துக் காட்டாக, ஒரு வங்கிக் கணக்கு துவங்கும்போது, ஆதார் எண் மற்றும் விண்ணப்பதாரரிடம் இருந்து சேகரிக்கப் பட்ட உயிரியல் தவல்களை UIDAI க்கு சரிபார்த்தலுக்கு அனுப்புவார்கள். வங்கி சமர்ப்பித்த விவரங்கள் அடிப்படையில்,CIDR ஆவணங்களை UIDAI சரிபார்த்து சரியாக இருந்தால் சரி " என்ற அங்கீகாரமும் இல்லை' என்றால் இல்லை என்ற அங்கீகாரமும் வழங்கும்.

அருகில் உள்ள படத்தில்,ரமேஷ் Y ,மற்றும் கமல் S, எனும் இருவர் வங்கி கணக்கு துவங்க விரும்பினார்கள். இருவரும் ஒரே ஆதார் எண்ணை அவர்கள் அடையாளமாக அனுப்பினார்கள். UIDAI இலிருந்து அங்கீகார எண் பெற்ற பின் கமல் S, ரமேஷ் Y, என்பவரின் ஆதார் எண்ணை தனது என்று அனுப்பினார் என்று கண்டுபிடிக்கப் பட்டு அவரது வேண்டுகோள் வங்கியால் மறுக்கப் பட்டது.

- கட்டமைப்பு தொழில் நுட்பத்தில் UIDAI பெரிய பாத்திரம் வகிக்கிறது. மையக் கணினியில் ஒரு நபரின் உயிரியல் மற்றும் மக்கள்தொகையியல் விவரங்கள் அடங்கிய ஆதார் தரவு தளம் சேகரிக்கப் பட்டிருக்கும். அந்த நபரின் சேர்க்கை கணினி மயமாக்கப்படும் மற்றும் பதிவு மையம் மற்றும் CIDRக்கு நெட் வர்க் மூலமாக தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படும். ஒரு நபரின் அடையாள சரி பார்த்தலை சேவை மையத்தினர் ஆன் லைன் வழியாகவே சரிப்பார்ப்பர். UIDAI தகவல்கள் பாதுகாப்பிற்காக அமைப்புக்களை பொருத்தியிருக்கும் . இதனால் அங்கீகாரம் இல்லாத எவரும் இந்த தகவல்களை பார்க்க முடியாது.

UIDAI சூழல் அமைப்பு.

"- ஒரு பகுதியில் அல்லது பரப்பில் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்ட உயிருள்ள - உயிரற்ற பொருட்கள் எல்லாம் கலந்ததே ஒரு சூழல் அமைப்பு ஆகும்."

UIDAI **சூழல் அமைப்பு தொடர்பான காட்சி விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:**



படம் 7: UIDAI சூழல் அமைப்பு

UIDAI சூழல் அமைப்பில் பல்வேறு விதமான பங்கு பெறுபவரும் அவர்களின் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளுதலும் இருக்கும். சூழல் அமைப்பின் முக்கிய பங்குதாரர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- **UIDAI: இந்திய அரசாங்கத்தால் செயலாக்கப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும்.** UID **அமைப்பில் பதிவு செய்ய மற்றும் சரிபார்த்தல் செயல்முறைக்காக பின்பற்ற வேண்டிய பல்வேறு நடைமுறைகளையும்** UIDAI **விளக்கமாகக் காட்டும்.**
- **அறிமுகப் படுத்துவோர்: அறிமுகப் படுத்துவோர் என்பவர் பதிவாளர் மற்றும்** UIDAI **யில் பதிவு செய்யப்பட்ட நபர். இவர் விலாசம் மற்றும் அடையாளம் தொடர்பான செல்லுபடியாகும் ஆவணம் ஏதும் இல்லாமல் இருக்கும் ஒரு நபரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவார். அவருக்குத் தெரிந்த நபரின் அடையாளம் மற்றும் விலாசத்தை மட்டும் உறுதி செய்வார். உறுதிப்பாடு அறிமுகப் படுத்துவோரின் ஆதார் எண் மற்றும் பயோ மெட்ரிக் தரவை உபயோகித்து செய்யப்படும். எனவே அறிமுகப் படுத்துவோர் முதலில் பதிவு செய்து ஆதார் எண்ணை பெற வேண்டும்.**
- **பதிவாளர்கள்: அரசாங்கம் மற்றும் தனியார் ஏஜென்சிகள் உட்பட இந்தியாவில் பதிவு செய்யப்பட வேண்டிய குடிமக்களுக்காக** UIDAI **ஆல் அங்கீகாரம் செய்யப்பட்டவர்கள் ஆவார்கள் . எடுத்துக் காட்டாக, ஆயுள் காப்பீடு நிறுவனம்** (LIC), LPG **வர்த்தக நிறுவனங்கள், தேசீய ஆரோக்கிய காப்பீடு திட்டம்** (RSBY), **தேசிய கிராமப் புற**

வளர்ச்சி உத்தரவாத சட்டம் (NREGA),**போன்ற பொதுத் துறை வங்கிகள்**, **இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள் போன்றவை.**

- **பதிவு ஏஜென்சிகள்**: குடிமக்களை பதிவு செய்ய பதிவாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏஜென்சிகள். பதிவாளர்கள் சார்பாக இவை செயல்படும் மற்றும் இவை பதிவாளரிடம் கணக்கிடப்படும்..
- **பதிவு ஏஜென்சி சூபர்வைசர்கள்**: இவர்கள் பதிவு மையங்களை நிர்மாணித்து, நிர்வகித்து, பிரச்சினைகள் வந்தால் அவற்றை கையாளுவார்கள்.
- **பதிவு ஏஜென்சி ஆபரேட்டர்கள்**: குடிமக்களின் மக்கட்தொகையியல் மற்றும் உயிரியல் தகவல்களை சேகரித்து வைப்பார்கள் . இவர்கள் குடிமக்களுடன் நேரிடையான தொடர்பு கொண்டவர்கள்..
- **கொண்டு செல்பவர்**: பதிவு ஏஜென்சி கடத்துனர் (கேரியர்) எனப்படும் கொரியர் மற்றும் அஞ்சல் சேவைகளுடன் தொடர்பு வைத்திருப்பார்கள் . இவர்கள் பதிவு ஏஜென்சி மற்றும் CIDR. இடையே டெலிவரி ஏஜென்சியாக செயல்படுவார்கள்.
- **ஹார்டுவேர்& சாப்ட் வேர் விற்பனையாளர்கள்**: லேப்டாப், (மடிக்கணினி), டெஸ்க்டாப், பிரிண்டர், பயோமெட்ரிக் டிவைசஸ் போன்ற பொருட்களை விற்பவர்கள் ஹார்டு வேர் விற்பனையாளர்கள் எனப்படுவார்கள். சாப்ட் வேர் விற்பனையாளர்கள், ஆபரேடிங் சிஸ்டம் (விண்டோஸ் XP, விஸ்டா , விண்டோஸ் 7) சாப்ட் வேர் அப்ளிகேஷன்ஸ் போன்றவற்றை விற்பவர்கள்.
- **பயிற்சி நிறுவனம்** : பதிவு ஆபரேட்டர்கள், சூப்பர்வைசர்கள் தொழில் நுட்ப துணை ஊழியர்கள் போன்ற நபர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஏஜென்சிகள் இவை ஆகும்.
- **சோதனை மற்றும் சான்றிதழ் வழங்கும் ஏஜென்சி**: ஆதார் பதிவு அமைப்பில் வேலை வாய்ப்பு பெற நினைக்கும் நபர்களை மதிப்பீடு செய்யும் ஏஜென்சிகள் இவர்கள். (எ.கா. பதிவு ஆபரேட்டர்கள்). பதிவு செயல்முறையை கையாள தகுதியான நபர்கள் மற்றும் பயிற்சி பெற்றவர்கள் என்று உறுதிப்படுத்தும் இந்த அமைப்பு.
- **தொடர்பு மையம்** : UIDAI பயன்பாடு தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் மையம். ஒரு நபர் தனக்கு எற்படும் பிரச்சினையை விளக்கி மின் அஞ்சல் மூலம் அல்லது ஹெல்ப் லைன் நம்பர் (உதவி சேவை மையம்) வழியாக எடுத்துரைக்கலாம்.
- **போர்ட்டல் நிர்வாக ஏஜென்சி** : UIDAI இணைய தளத்தை பராமரிக்கும் ஏஜென்சி இவர்கள். (http://www.uidai.gov.in).
- **அங்கீகார பயனர் ஏஜென்சிகள்**: எந்த ஒரு வாடிக்கையாளர் /லாபதாரர் அடையாளத்தை அங்கீகாரம் செய்ய வேண்டிய / மற்றும் அவர்களுக்கு சேவைகளை பெற தொடர்பு கொள்ள அனுமதி அளிக்கும் நிறுவனம். எ.கா:- வங்கிகள் - அவர்களது வாடிக்கையாளர்களின் அடையாளத்தை சரிபார்த்து அவர்களின் சேமிப்பு கணக்குடன் தொடர்பு கொள்ள அனுமதி அளிக்கிறது. NREGA: பதிவு செய்யப்பட்ட ஊழியர்கள் அடையாளத்தை சரிபார்த்து அவர்களின் சம்பளக் கணக்குடன் தொடர்பு கொள்ள அனுமதி அளிக்கும் அமைப்பு.

குறிப்பு : உபயோகமான பதங்கள்

நீங்கள் UID செயல்முறையைப் புரிந்து கொள்ள தேவையான சில வாக்கியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- ஆதார் எண்: இந்திய வசிப்பாளர்களுக்கு அரசாங்கத்தால் அடையாள சான்றாக வழங்கப்பட்ட 12 இலக்க எண் ஆதார்.
- மத்திய அடையாள தரவு களஞ்சியம்: (CIDR): UIDAI - ஆல் நிறுவப்பட்டு பராமரிக்கப்படும் ஒரு அமைப்பு. இது ஆதார் எண் வழங்குதல், குடியுரிமை தகவல்களை மேம்படுத்துதல், குடியுரிமை பெற்றவர்களின் தகவல்களை மேம்படுத்துதல் மற்றும் அங்கீகரித்தல் போன்றவற்றை செய்கிறது.
- பதிவு செய்தல்: குடியுரிமை பெற்றவரின் தகவல்கள் (மக்கள் தொகையியல் மற்றும் பயோ மெட்ரிக் உட்பட தரவுகள்) சேகரிக்கப்படும் முறை. UIDAI ஆல் தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவாளர் மூலம் பதிவு செய்யப்படும். அவர் பிறகு பதிவு ஏஜென்சி உதவியுடன் பதிவு செய்வார்.
- பதிவு மையம்: இந்த இடத்தில்தான் பதிவு செய்யப்படும். ஒவ்வொரு பதிவு மையமும் பதிவுகள் நன்றாக செயல்பட தேவையான பதிவு செயல்முறை மையத்தைக் கொண்டிருக்கும். ஒரு பதிவு மையம் பல்வேறு பதிவு நிலையங்களை வைத்திருக்கலாம்.
- பதிவு நிலையம்: ஒரு குடிமகனின் மக்கட் தொகையில் & பயோ மெட்ரிக் தரவுகளை சேகரித்து தன்னிடம் வைத்திருக்கும் அமைப்பு. இங்கு கணினி , பயோ மெட்ரிக் சாதனங்கள் மற்றும் பிரிண்டர் போன்ற இதர சாதனங்களும் இருக்கும்.

வினாடி வினா

1. UIDAI சூழல் அமைப்பில் “அறிமுகப் படுத்துவோர் “என்ற வார்த்தைக்கு பொருள் என்ன ?
2. UIDAI பதிவாளர் என்ன செய்வார்?
3. பதிவு செய்தல் என்றால் என்ன?
4. பதிவு ஏஜென்சி சூபர்வைசரின் செயல்பாடு என்ன?

ஆதார் மூலமாக எல்லோருக்கும் ஏற்படும்: நன்மைகள்

குடியுரிமை உள்ளவர்கள், பதிவாளர்கள், பதிவு செய்பவர்கள் மற்றும் இந்திய அரசாங்கம் எல்லோருக்கும் ஆதார் மூலம் ஏற்படும் லாபங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:

- குடியுரிமை உள்ளவர்கள்: ஆதார் அடையாள சரிபார்த்தலுக்கு உள்ள ஒரே மூல வழியாகும். ஒரு முறை குடிமக்கள் பதிவு செய்த பிறகு பல்வேறு முறை இந்த எண்ணை உபயோகிக்கலாம். வங்கிகணக்கு பெற, பாஸ்போர்ட் , ஓட்டுனர் உரிமம் (டிரைவிங் லைசன்ஸ்) போன்றவற்றைப் பெற சேவைகளை அணுகும் போது, ஒவ்வொரு முறையும் துணை ஆவணங்களை சமர்ப்பிக்கும் பிரச்சினைகள் இல்லாமல் இது காக்கும்.
  பெரிய அளவிலான குடியுரிமை உள்ளவர்கள் தற்போது அடையாள ஆவணங்கள் ஏதும் இல்லாதவர்கள் - ஆதாயம் பெரும் நபர் பட்டியலில் இருந்து இதனால் "விலக்கப் பட்டவர்கள்" கூட "அறிமுகப் படுத்துவர் அமைப்பு " வழியாக அடையாளம் பெறலாம். ஆதார் எண் (அல்லது UID) இதனால் "எல்லா கதவுகளையும் திறக்கும் திறவு கோல்" (சாவி) ஆக - முக்கியமாக ஏழைகளுக்கு உதவுகிறது.
- பதிவாளர்கள் மற்றும் பதிவு செய்பவர்கள்: UIDAI ஆவணங்கள் சரி பார்க்கப் பட்ட பிறகு மட்டும் மக்களுக்கு பதிவு செய்யும். பதிவாளர்களுக்கு இரட்டை பதிவு இல்லாமல் தரவுகளில் சரி பார்த்து குறிப்பிட்ட முறைகளையும் பண சேமிப்பையும் பெற இது உதவுகிறது. செலவு குறித்த பகுதியில் பதிவாளர்களுக்கு UIDAI ன் சரிபார்த்தல் செயல்முறை அவர்கள் சேவைகளை பெறுபவரின் அடையாளத்தை கண்டு பிடிக்க, குறைந்த செலவை உறுதிப் படுத்தும். சமூக இலக்கின் மீது கவனம் செலுத்தும் பதிவாளர்களுக்கு, நம்பகமான அடையாள எண், அங்கீகாரம் பெற இன்று வரை கடினமாக இருக்கும் குழுக்களுடன்

அவர்களது அணுகுமுறையை விரிவாக்க உதவுகிறது. ஆதார் வழங்கும் இந்த வலுவான அங்கீகாரம் சேவைகளை மேம்படுத்தி, நல்ல குடியுரிமை இருக்க வழி காட்டுகிறது.

- அரசாங்கம்: பல்வேறு திட்டங்களின் கீழ் இரட்டிப்பு பதிவை நீக்கி அரசின் கருவூலத்தில் கணிசமான பணம் சேமிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. லாபம் தரும் திட்டங்கள் செயல்படுத்த நேரிடையாக அரசுக்கு குடிமக்களின் துல்லியமான தகவல்களை அளிக்கும் மற்றும் அரசு துறைகளை முதலீடுகளில் ஒத்துழைத்து தகவல்களை பகிர்ந்து கொள்ள அனுமதி அளிக்கிறது.

குறிப்பு:NREGA திட்டம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஏழை மக்களும் பங்குதாரர்களாகஆவார்கள் என்ற நம்பிக்கையில் அரசாங்கம் பணத்தை பல்வேறு திட்டங்களில் செலவு செய்வதில் அதிகரிப்பதிலும் ஏழை மக்களையும் , சமூகத்தில் பின் தங்கியவர்களையும் இலக்காக வைத்து இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தி புதிய திட்டங்களையும் துவக்கியுள்ளது.

NREGA திட்டத்தை எடுத்துக் காட்டாக வைத்துக் கொள்வோம். ஆய்வின் மூலமாக கண்டறிந்ததில் இந்த திட்டத்தில் பல்வேறு "மோசடிகள் "(ஒழுக்குகள்)இருப்பதாகவும் அதனால், இலக்காக வைத்துள்ள ஏழை மக்களை லாபங்கள் சென்றடைவதில்லை என்றும் தெரிய வந்தது. அவர்களுக்காக அரசு ஒதுக்கிய NREGA சம்பளப் பணத்தில் ரூ 5,840 கோடிக்கு பதிலாக ரூ 1270கோடி மட்டுமே இந்த நிதியாண்டு 2007 -ல் செலவழிக்கப் பட்டது என்று சில ஆய்வுகள் கண்டறிந்துள்ளன . : 2006-07 ஆம் வருடம் திட்டத்தின் கீழ் அரசு செலவழித்த தொகை 8,823 கோடி ரூபாய் .(39,000 கோடி ரூபாய் 2009-10-ல்)ஆனால் இலக்கு வைத்த மக்களுக்கு சென்றடைந்த பணம் 14.7%மட்டுமே. அதாவது -ரூ 1,270 கோடி ரூபாய் என்பதாகும்

பரப்புதல்: “தகவல் மற்றும் விழிப்புணர்ச்சி “ என்ற வார்த்தையை பரப்புதல்

இந்தியக் குடியுரிமை உள்ள ஒவ்வொருவருக்கும் “ஆதார்” ஆதாயத்தை தரும். இந்த செய்தியை இந்தியாவின் ஒவ்வொரு பகுதிகளிலும் பரப்ப வேண்டும்; ஒவ்வொரு குடிமகனும் “ஆதார் மற்றும் அதன் லாபங்கள்” என்னவென்று தெரிந்து கொள்ளவேண்டும். ஆதார் தொடர்பான செய்தியை அதிக அளவில் பரப்ப கீழே உள்ள இலக்குகள் விவரமாக கொடுக்கப் பட்டுள்ளன.

- முழுமையான பரவல்: இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் இதை அறிந்து கொள்ளும் வகையில் செய்தியை பரப்ப உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ஆதாரைப் புரிந்து கொள்ளுதல்: ஆதார் என்றால் என்ன? அது மக்களுக்கு என்னென்ன லாபங்களை மக்களுக்க் வழங்க முடியும் அது எவ்வாறு உதவும் என்று அறிந்து கொள்ளுதல்.
- ஆதார் செயல்முறையை புரிந்து கொள்ளுதல்: குடிமக்கள் ஆதார் பதிவு செயல்முறை, எப்படி எப்பொழுது ஆதாரை பெற முடியும் அவர்களது குறைபாடுகளைக் கையாளுவது எப்படி என்று அறிவார்களா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- சீரான புரிதல்: மேற்கூறிய புரிதல் சீரானது மற்றும் எல்லோரையும் சென்றடைந்தது என்று உறுதி செய்தல்.
- பதிவு செய்வதற்காக மக்களை திரட்டுதல்: மக்களை ஆதார் எண் பெற்றுக் கொள்ள பங்குபெறுமாறு திரட்டுதல்.

- பதிவு செய்தல் மற்றும் அறிமுகப்படுத்துவோரை திரட்டுதல்: அறிமுகப்படுத்துவோர் மிக முக்கியமானவர்கள், ஆதார் தகவல் செயல்பாட்டில் உள்ள வழிகளை கீழே உள்ள படம் காட்டுகிறது. இதில் அவர்கள் பதிவு ஆகி இருக்க வேண்டும் அவர்கள் இதைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

கீழ்க்கண்ட மதிப்புகள் ஆதார் தகவல் தொடர்பு செயல்முறைக்கான வழிகள் ஆகும்.



படம் 8: ஆதார் தகவல் செயல்பாட்டில் உள்ள வழிகள்

மேலே கூறியபடி UIDAI-ன் ஒட்டுமொத்த தகவல் மற்றும் விளம்பர மூலோபாயம் பல்வேறு அளவுகளைக் கொண்டது. இதில் ஒவ்வொன்றும் வெவ்வேறு குறிக்கோள்களை உடையது.பதிவு செய்யும் ஏஜென்சி, பதிவு செயல்முறையின் தகவல் மற்றும் விளம்பரத்திற்கு பொறுப்பேற்கும்.

வழி 1: மக்கள் விழிப்புணர்வு

குறிக்கோள் : எல்லா குடிமக்களையும் அடைய மக்கள் விழிப்புணர்வுக்குத் தேவையான பாரம்பரிய வழிகளை உபயோகித்தல்.

<u>திட்டம்</u> : திட்டத்தை கவரும் மாநில அளவைச் சார்ந்து தேதிகள் வேறுபட்டாலும் உரிய பதிவு நாள் துவங்கும் தேதிக்கு ஏறக்குறைய முப்பது நாட்கள் (30)முன்னரே செயல்பாடு துவங்கும். எனினும் சில பகுதிகளில் மக்கள் விழிப்புணர்வு தேவையில்லை. அப்படிப்பட்ட பகுதிகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

a. a. பதிவு செய்வதற்கான அடையாளம் காட்டப்பட்ட இலக்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. அந்த மொத்தப் பகுதியில் உள்ள மக்களையும் கணக்கில் கொண்டு வராது. விடுபட்ட பகுதி மக்கள் இப்போதைக்கு பதிவின் பட்டியலில் இல்லையென்றால் மக்கள் விழிப்புணர்வுக்கு அவசியம் இல்லை.
b. முடிக்க வேண்டிய இடப்பகுதி மிகவும் சிறியது. சிதறியது போல ஆங்காங்கே உள்ளது. அப்படிப்பட்ட பகுதிகளில், அளவான விழிப்புணர்வு முகாம் உள்ளூர் வானொலி அல்லது அச்சு ஊடகம் (நோட்டீஸ்) போதுமானது .

<u>வழிகள் :</u> தொலைக்காட்சி,(TV) வானொலி, அச்சு, வலைத்தளம், மற்றும் தகவல் தொடர்பு (விவரங்கள் பின் பகுதியில்).

<u>பங்கு :</u> DAVP மற்றும் இதர தேசீய ஏஜென்சிகள் துணையுடன் UIDAI விரிவாக்கம் மற்றும் கருத்தை செயல்படுத்த வேண்டும்.

வழி 2: அறிமுகப்படுத்துவோர் மற்றும் பதிவாளர்களுக்கு பதிவு மற்றும் IEC.

நோக்கம்: அந்த பகுதியில் உள்ள அறிமுகப்படுத்துவோர், பதிவாளர் அதிகாரிகள் மற்றும் இதர நம்பகமான நபர்களது பதிவு மற்றும் கல்வி.

திட்டம்: பதிவுக்கு 45 நாட்களுக்கு முன்னரே இந்த நடவடிக்கை துவக்க வேண்டும். கீழ்க்கண்ட விதிகளை பின்பற்றவேண்டும்.

- ஆதார் தொடர்பான பதிவு மற்றும் கல்விக்காக வரும்படி சம்பந்தப்பட்ட அரசு அதிகாரியிடமிருந்து கடிதம் பெற வேண்டும்.
- தகவல்களை பரப்ப ஒரு மணி நேரம் ஆகலாம் மற்றும் இது மையமாக்கப்பட்ட தாலுக்கா அளவில் இடத்தில் போதுமான ஏற்பாடுகளுடன் திட்டமிடப்பட வேண்டும். பதிவாளர் அதிகாரிகள், பதிவு செய்யும் ஆப்பரேட்டர்கள் மற்றும் அறிமுகப்படுத்துவோர்களுக்காக ஒரு குழுவாக பயிற்சி அளிக்கப் படவேண்டும்.
- சிறுபான்மையினர் என்று உறுதிபடுத்த பல்வேறு கிராமங்கள் இணைக்கப்பட வேண்டும்.

இருக்கும் தரவு தளம் மூலமாக, பதிவாளர்களே குடியுரிமை உள்ளவர்களுக்கு பதிவு செய்வதானால், அறிமுகப்படுத்துவோர் தகவல் இந்த நிலையில் தேவையில்லை ஆயினும், ஆதிக்கமுள்ளவர்களின் அடையாளம் மற்றும் செல்வாக்கு தேவைப்படலாம்.

வழிகள்: இடைமுக தனிப்பட்ட தகவல் (இன்டர் பெர்சனல் கம்யூனிகேஷன்) (ஆடியோ, வீடியோ, பயிற்சி, IVRS) -விவரங்கள் அடுத்த பகுதியில்.

பங்குபெறுபவர்: பதிவாளர், UIDAI ஆதரவுடன் உள்ளூர் அரசாங்க அதிகாரிகள்.

வழி 3.1 : பதிவுக்கு முன் விழிப்புணர்வு

நோக்கம்: முன் சேரல் மற்றும் பதிவு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் அணி திரட்டலில் மிகவும் பயனைத் தரும். இந்த நிலை, மக்களுக்கு எங்கு , எப்பொழுது, எப்படி பதிவு செய்ய, போன்ற தகவல்களைப் பெற உறுதி செய்ய முடியும்.

திட்டம்: இந்த நடவடிக்கை சுமார் 7 நாட்களுக்கு முன் உண்மையான சேரல் துவங்கும் முன்னரே, செயல்படத் துவங்கும். இந்த நிலையில்தான் எல்லாவித தகவல் வழிகள் தீவிரமாக செயல்படும். எனவே, ஊடகங்கள் மற்றும் செயல்பாட்டு திட்டங்கள் இதற்காக ஊக்குவிக்கப் பட வேண்டும்.. பேனர்கள், சுவரொட்டிகள், விளம்பர தட்டிகள், சுவர் ஓவியங்கள், விற்பனைக் கூடங்கள், பாட்டு நாடகம் போன்ற வெளிப்புற ஊடகங்களும் இதில் அடங்கும். (விவரங்கள் பின்னர்)

பங்கு : பதிவாளர், உள்ளூர் மற்றும் அரசு அதிகாரிகள் போன்றவர்களுடன் முன்பே ஒத்துழைத்து உள்ளூர் /மாவட்ட அளவு முகாம்களுக்காக தேவையான அனுமதி மற்றும் கட்டமைப்புகள் இருக்குமாறு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

வழி 3.2:சேரல் விழிப்புணர்வு.

குறிக்கோள். பதிவு நாள் அன்று பதிவு நடக்கும் இடத்தில் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

திட்டம்: பேனர்கள், சுவரொட்டிகள், விளம்பர தட்டிகள், சுவர் ஓவியங்கள், விற்பனைக் கூடங்கள், வேன், வீடியோ போன்ற ஊடகங்களும் இதில் அடங்கும். (விவரங்கள் பின்னர்)

பங்கு : பதிவாளர், உள்ளூர் DAVP, DFP (விளம்பரத் துறை)மற்றும் பாடல் மற்றும் நாடகத் துறை மற்றும் இதர தொடர்பான ஏஜென்சிகள் போன்றவர்களுடன் இணைந்து செயல்படுதல்.

படி4:ஆதாரின் பயன்பாடுகள்:

இது நுகர்வோர் பதிவு செய்த பின்னர் உண்மையிலேயே ஆதாரை உபயோகிக்க அதன் மூலம் எல்லா லாபங்களையும் அனுபவிக்க துவங்கி ய பிறகு ஏற்படும் நிலையாகும். இதன் முக்கிய நோக்கம் நுகர்வோர் ஆதாரை அங்கீகாரம் பெற எப்படி உபயோகிக்க வேண்டும் மற்றும் நேர்மறை அனுபவம் பெறுகிறார்கள் என்பதை புரிந்து கொண்டார்கள் என்று உறுதிப் படுத்துதல் ஆகும்.

விழிப்புணர்வை எப்படி பரப்ப வேண்டும்?

விழிப்புணர்வை பரப்ப பல்வேறு தகவல் சேனல்களை உபயோகிக்க வேண்டும். அதில் சில வழிமுறைகள்

a. **ஒளிபரப்பு: பாரம்பரிய மற்றும் புதிய வெகு ஜன ஊடகம்.**
b. **தகவல்: ஒளிபரப்பு ஊடகத்திற்கு அப்பால் மற்றும் அதற்குள் தகவல் வழிகள்.**
c. **அவுட் டோர்: வெளிப்புறத்தில் தொடர்புகொள்ளும் இடங்களில் உட்புற நடவடிக்கைகள்.**
d. **பொழுதுபோக்கு: திரைப்படங்கள், தியேட்டர், பாடல்கள் மற்றும் இதர பொழுதுபோக்கு அம்சங்கள்.**
e. **ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளுதல்: குழுவாக அல்லது ஒருவருக்கொருவர் தகவல் பரிமாற்றம்**
f. **UIDAI ஆதரவு கட்டமைப்பு: பதிவாளர் மற்றும் சேர்க்கை ஏஜென்சி கட்டமைப்பு.**

பயிற்சி பெற்ற பராமரிப்பு, அதிகாரிகள் கலைப்பணி உள்ளூரில் பரப்பப்படும் எந்த ஒரு செய்திக்கும் UIDAI **ன் ஒப்புதல் தேவை பொருளடக்கம் மற்றும் வடிவமைப்பு படிவங்கள்,** UIDAI **விழிப்புணர்வு மற்றும் தகவல் குழுவால் வழங்கப்படும்**

உள்ளூர் நிலையில் எந்த ஒரு குறிப்பும் இணைக்கப்பட்டால் UIDAI **-ன் ஒப்புதல் அதற்குத் தேவையாகும்.**

சுருக்கம் / குறுகிய படிவம்

வார்த்தை	விளக்கம்
BPL	வறுமைக் கோட்டின் கீழ்
CIDR	மத்திய அடையாள தரவு களஞ்சியம்
EGoM	அதிகாரமிக்க அமைச்சர்கள் குழு
LIC	ஆயுள் காப்பீடு நிறுவனம்
PDS	பொது விநியோகத் திட்டம்
NPR	தேசீய மக்கட்தொகைப் பதிவேடு
NREGA	தேசீய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாத சட்டம்
UID	தனிப்பட்ட அடையாளம்
UIDAI	இந்திய தனித்துவ அடையாள ஆணையம்